# வளர் தமிழ் ஆய்வு

யாதும் ஊரே
யாவரும் கேளிர்


பதிப்பாசிரியர்கள்

**சி. மைக்கேல் சரோஜினி பாய்**

**ப. பத்மநாப பிள்ளை**

**வ. இராசரத்தினம்**



வளர் தமிழ் ஆய்வு மன்றம்

திண்டுக்கல்

**2017**

ISBN NO : 978-81-920884-6-4

| | | |
|---|---|---|
| நூற்பெயர் | : | வளர் தமிழ் ஆய்வு (கட்டுரைத் தொகுப்பு) |
| பதிப்பாசிரியர்கள் | : | சி. மைக்கேல் சரோஜினி பாய்<br>ப. பத்மநாப பிள்ளை<br>வ. இராசரத்தினம் |
| முதற் பதிப்பு | : | மே 2017 |
| தாள் | : | **18.6 மேப் லித்தோ** |
| அளவு | : | டெம்மி |
| அச்சுரு | : | அகராதி 10 புள்ளி |
| பக்கம் | : | **x + 320** |
| விலை | : | ரூபாய் 500/- |
| அச்சகம் | : | சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ்<br>சிவகாசி |
| உரிமை | : | பதிப்பாசிரியர்களுக்கு |
| வெளியீடு | : | வளர் தமிழ் ஆய்வு மன்றம்<br>பூங்குன்றன் பள்ளி வளாகம்<br>விவேகானந்தா நகர்<br>திண்டுக்கல் - 624 001<br>தமிழ்நாடு<br>தொ.பே. 0451-2427458 |

| | | |
|---|---|---|
| 101. | ஆ. மெர்சி ஆஞ்சலா<br>அப்பர் அடிகளின் நல்லொழுக்கச் சிந்தனைகள் | 126 |
| 102. | சி.மைக்கேல் சரோஜினி பாய்<br>தழை ஆடை - ஒரு பெண்ணியப் பார்வை | 130 |
| 103. | சி. யசோதா<br>நடையியல் நோக்கில் பாரதியார் கவிதைகள் | 135 |
| 104. | தி. யோகேஸ்வரன்<br>இறை நிலையும் தமிழின் சிறப்பும் | 140 |
| 105. | ம. ரமூலா ரூபி<br>திருக்குறளில் விழுமியங்கள் | 145 |
| 106. | மு. ராதிகா<br>பழந்தமிழர்களின் வழிபாட்டு முறைகள் | 150 |
| 107. | நா. ராஜலட்சுமி<br>கிருஷ்ணதாசி புதினம் காட்டும் தேவதாசி முறை | 153 |
| 108. | சி. ராஜலெட்சுமி<br>பெரிய புராணத்தில் சமயப் பூசல்கள் | 157 |
| 109. | செ. ராஜேஷ் கண்ணா<br>தற்கால புதுக்கவிதைகளில் உவமைகளின் வளர்ச்சி | 162 |
| 110. | நா. ரேணுகா<br>தமிழ்ப் பதிப்புலகில் மர்ரே. எஸ். ராஜம் | 166 |
| 111. | மா. லட்சுமிபிரியா<br>படைப்பாளர்களும் ஐக்கூவும் | 170 |
| 112. | பா. லயோலா ஜுலியட் மேரி<br>பற்றற்றோர் | 174 |
| 113. | ப. லாவண்யா<br>நீர்கொத்தி புதினம் காட்டும் தண்ணீர் பிரச்சினை | 179 |
| 114. | ரா. லிஜி<br>பழந்தமிழர் உணவுகள் | 183 |

# அப்பர் அடிகளின் நல்லொழுக்கச் சிந்தனைகள்

**ஆ.மெர்சி ஆஞ்சலா**
பாத்திமா கல்லூரி, மதுரை.

**முன்னுரை**

தமிழை வேதமாக மட்டுமல்ல இறை நாதமாகவும் பாவித்த பெரியோர்களுள் ஒருவராகக் கருதப்படுபவர் அப்பர் அடிகள். இறை நம்பிக்கையை இவரது போதனையாகக் கொண்டதோடல்லாமல் ஒழுக்க நெறிகளையும் தமது பாடல்களின் கருவாகக் கொண்டு மக்களைச் சீர்படுத்த முயன்றார். அடிகளாரின் மக்களுக்கான ஒழுக்கச் சிந்தனைகளைக் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**இறைவன் உருவாக்கிய மனிதன்**

இறைவனின் படைப்பு நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. அதிலும் மனிதனின் படைப்பு அதிசயமானது. ஒரு வீடு கட்டும் முறையினை மனித உடலின் உருவ அமைப்பில் கொண்டு வந்த பாங்கு இறையின் பேராற்றலை, மனித உருவ அமைப்பில் அவரது ஈடுபாட்டைப் பறை சாற்றுவதாக அமைகிறது.

கால் கொடுத்து இருகையேற்றிக்
கழி நிரைத்து இறைச்சி மேய்ந்து
தோல்படுத்து உதிர நீரால்
சுவரெடுத்து இரண்டு வாசல்
ஏல்உடைத் தா அமைத்தங்கு
ஏழுசா லேகம் பண்ணி
மால் கொடுத்து ஆவி வைத்தார்
மாமறைக் காட னாரே (திருமறைக்காடு -4)

கால் கொடுத்து நிற்க வைத்தார். இரு கைகளை வைத்து எலும்புகளை வரிசைப்படுத்தி இறைச்சியை வேய்ந்தார், தோலால் மூடினார். இரத்தத்தை ஊற்றிச் சுவர் எழுப்பினார். இரண்டு வாசல் வைத்தார் (வாய், மலத்துவாரம்) ஏழு சன்னல்கள் வைத்தார். (கண்-2, காது -2, மூக்குத்துளை -2, சிறுநீர்த்துளை-1) உயிர் கொடுத்தார் என்று இறைவன் தேவையறிந்து உருவாக்கிய உடலமைப்பை அப்பர் தமது பாடல்மூலம் தெளிவாகப் புலப்படுத்துகிறார்.

**நிரந்தரமில்லா வாழ்க்கை**

இவ்வுலக வாழ்க்கை நிலையற்றது. நிலையற்றவற்றில் மனதைச் செலுத்துவதை விட நிலையானவற்றில் ஈடுபட்டு முயல்வதே சிறப்பானது. தன்னந்தனியாக பூமியில் பிறந்த நாம் தனியாகவே இவ்வுலகை விட்டுப் பிரிவோம் என்பதை எப்பொழுதும் மனதில் இருத்தல் வேண்டும். எந்த உறவுகளும் நம்முடன் வருவதில்லை என்பதனை அப்பர்,